## 1000 காளைகள், 900 வீரர்கள் பங்கேற்பு!

## அலங்காநல்லூரில் உலகப் புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு!

# சீறிப்பாய்ந்த காளைகள்!























### உலகப் புகழ் பெற்ற

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு; துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைத்து பார்வையிட்டார்!

## தங்க மோதிரங்கள்– தங்க காசுகள்– டிராக்டர் –கார் பரிசு! பல்லாயிரக்கணக்கானோர் நேரில் பார்த்து உற்சாகம்!

**மதுரை, ஜன.17-**

**மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் தமிழர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா வெகு சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு நேற்று நடைபெற்ற இந்த புகழ்மிக்க ஜல்லிக்கட்டு விழாவை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து நேரில் பார்வையிட்டு பரிசுகள் வழங்கினார்.**

உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வியாழக்கிழமை காலை 8.15 மணியளவில் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

அதை தொடர்ந்து முதலாவதாக கோவில் மரியாதை காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. பின்னர் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 1000க்கும் மேற்பட்ட ஜல்லிக்கட்டு காளைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவிழ்த்து விடப்பட்டன.

வாடிவாசலிலிருந்து துள்ளிக்குதித்து வெளியேறிய காளைகள் சில சீறிப்பாய்ந்து பாராட்டை பெற்றது. சீறிப்பாய்ந்து வந்த காளைகளை காளையர்கள் திமிலை பிடித்து அடக்கி தங்களது வீரத்தை நிரூபித்தார்கள்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.1.2025) உலகப் புகழ்பெற்ற மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கதமிழ்ச்செல்வன், மரு.ராணி ஸ்ரீகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.செள.சங்கீதா ஆகியோர் உடனிருந்தனர்.

உற்சாகத்துடன் நடைபெற்ற சிறப்புமிக்க இந்த ஜல்லிக்கட்டு விழாவை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆர்வத்துடன் கண்டு ரசித்தார், இவருடன் இன்பநதி அவர்களும் ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தார்.

சிறந்த காளைகளுக்கும், சிறந்த காளையர்களுக்கும் ஒரு சவரன் எடை கொண்ட தங்க மோதிரங்கள் மற்றும் தங்க காசுகள், சைக்கிள்கள், பீரோ, கட்டில் என விலை உயர்ந்த பொருட்கள் பலவற்றை பரிசாக நேரில் வழங்கி பாராட்டி வாழ்த்தினார்.

இவ்விழாவிற்கு வருகை புரிந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை விழா மேடையில் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.

தொடர்ந்து சுமார் மூன்று மணி நேரம் ஜல்லிக்கட்டு விழாவை கண்டு மகிழ்ந்தார்.

முன்னதாக துணை முதல்வருக்கு மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வழிநெடுகிலும் பல்லாயிரக்கணக்கானோர் இரு வண்ணக்கொடிகளையும், வரவேற்பு பதாகைகளையும் கையில் ஏந்தியும் உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

இந்த சிறப்புமிக்க ஜல்லிக்கட்டு விழாவில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், தேனி நாடாளுமன்ற உறுப்பினர், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் மாநில இளைஞரணி அணி செயலாளர்கள் ஜி.பி.ராஜா இன்பா ஏ.என்.ராகு மற்றும் அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பெரும் திரளானோர் பங்கேற்றார்கள்.

போட்டியில் பங்கேற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விழா கமிட்டி சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது.

இந்த அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பாக விளையாடி தேர்வான ஜல்லிக்கட்டு காளைக்கு அதன் உரிமையாளருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக டிராக்டர் பரிசாக வழங்கப்பட்டது. அதே போன்று சிறந்த மாடுபிடி வீரருக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பாக சொகுசு கார் பரிசாக வழங்கப்பட்டது.

போட்டியை காண தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் பல்லாயிரக்கணக்கில் ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர்.

விழாவை துவக்கி வைத்து விட்டு புறப்பட்டுச் சென்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தபோது சிறப்பான ஜல்லிக்கட்டு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பாராட்டு தெரிவித்தார்.